**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.782/2024 நாள்- 20.04.2026

**<u>பி.வா.சா.1. திருமலைக்குமார்</u>**

**<u>குறுக்கு விசாரணை வாதி தரப்பில்</u>**

நான் இந்த வழக்கில் பிரதிவாதி இல்லை என்றால் சரிதான் என் பெற்றோர்களுக்காக வேண்டி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நிரூபணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான்தான் என் வழக்கறிஞருக்கு கூறினேன். நிரூபணவாக்குமூலத்தில் என் பெற்றோர் குமரேசனிடம் இருந்து கடன் வாங்கி ஒரு கடனுறுதிசீட்டு எழுதிக் கொடுத்ததாகவும் அந்த கடனை திருப்பிச் செலுத்திய பின்பும் கடனுறுதிசீட்டை திருப்பி செலுத்தவில்லை என்று வாதி, குமரேசன் மீது எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். என் அப்பா டீக்கடை நடத்தி வந்தார். என்னிடம் காண்பிக்கப்படும் வக்காலத்தில் உள்ள கையொப்பங்கள் பெற்றோர்களின் கையொப்பங்கள் தான். வா.சா.ஆ.1- கடனுறுதிசீட்டில் உள்ள கையொப்பங்கள் என் பெற்றோர்களின் கையொப்பங்கள் என்றால் சரிதான். என் பெற்றோர்கள் உண்மையிலேயே வாதியிடம் வா.சா.ஆ.1-ன் படி கடன் பெற்று கடனுறுதிசீட்டு எழுதிக் கொடுத்தார்கள் என்றும் தற்போது வழக்கிற்காக வாதிக்கு கடனுறுதிசீட்டு எழுதிக் கொடுக்கவில்லை என்றும் குமரேசனுக்கு எழுதிக் கொடுத்த கடனுறுதிசீட்டை வாதி பயன்படுத்தி வருவதாக பொய்யாக கூறுகிறேன் என்றும் அதனால் தான் என் பெற்றோர்கள் சாட்சியமாக விசாரிக்காமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியிடம் பெற்ற கடனை என் பெற்றோர்கள் திருப்பி செலுத்த கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல என் பெற்றோர்கள் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.